## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

## அசல் வழக்கு எண். 83/2022

பெயர் : சுரேஷ் P.W.1.

த/பெ. : சீத்தாராமன்

தேதி : 14.03.2024

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை:–

நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண்ணில் திருத்தம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தானது தரங்கம்பாடி தாலுக்கா, நடுக்கரை மேலப்பாதி கிராமத்தில் முத்துக்குமரன் நகரில் அமைந்துள்ளது என்றால் சரிதான். முத்துகுமரன் நகரில் மனை எண் 51 மற்றும் 52 ஐ நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற மனைகளானது 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட் யார் என்றால் சுரேஷ் என்கிற அலெக்சாண்டர் என்பவர் ஆவார். மேற்படி பவர் ஏஜெண்ட் என்ற முறையில் மனை எண் 51 மற்றும் 52 ஐ சுரேஷ் என்பவரிடமிருந்து தேவி என்பவர் 29.07.2013 ல் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். தேவியிடமிருந்துதான் நான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கெல்லையில் மாற்றம் உள்ளதா என்றால் இல்லை. புல எண் மட்டும் தான் தவறு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் திருத்தம் செய்து தர பிரதிவாதிகளிடம் நான் கேட்கவில்லை என்றாலும், பிரதிவாதிகளை அனுகி திருத்தம் செய்யக்கோரி நான் கேட்டிருந்தால் அவர்கள் திருத்தம் செய்து கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.